

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு திண்டுக்கல் கிழக்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் மாவட்டச் செயலாளர் செந்தில்குமார் திண்டுக்கல் அரசு மருத்துவக் கல்லூரியில் பிறந்த 24 குழந்தைகளுக்கு தங்க மோதிரமும், பிரசவித்த தாய்மார்களுக்கு மருத்துவப் பெட்டகங்களை வழங்கினார். உடன் மாவட்ட துணைச் செயலாளர் பிலால் உசேன், மாநகரச் செயலாளர் ராஜப்பா, மேயர் இளமதி ஜோதி பிரகாஷ், ஒன்றியச் செயலாளர்கள் நெடுஞ்செழியன், வெள்ளிமல தொ.மு.ச. செயலாளர் அழகர்சாமி , பொருளாளர் சரவணன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



முதலமைச்சர் , கழகத் தலைவர் அவர்களின் ஆலோசனைப்படி கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி பாளையங்கோட்டை மண்டலம் 35 வார்டு தலைமை தபால் நிலையம் அருகில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 10 லட்சம் மதிப்பில் புதிதாக கட்டப்பட இருக்கும் நியாய விலை கடை கட்டிடத்திற்கு மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ.அடிக்கல் நாட்டி பணிகளை துவக்கி வைத்தார். உடன் மேயர் ராமகிருஷ்ணன், துணை மேயர் ராஜ்,வழக்கறிஞர் தினேஷ்,மாமன்ற உறுப்பினர் கள் பேச்சியம்மாள்,கந்தன், தொ.மு.ச.அரசன் ராஜ், சுண்ணாம்பு மணி, மகேஷ், குணா அகஸ்டின் பெர்னாண்டஸ், மகேஷ் ஆதித்தன், கால்வாய் துரை பாண்டியன், சாய்பாபா பேட்டை கனி, காசிமணி, சேக் பிள்ளை உள்பட கழகத்தினர் பலர் உள்ளனர்.

## திருவாரூர் மாவட்டத்தில் கன மழை:

# அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா கிராமம் கிராமமாக ஆய்வு!

### மழைச் சேதங்களை விவசாயிகளிடம் கேட்டறிந்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டார்!





திருவாரூர், நவ. 29 -

கனமழை காரணமாக திருவாரூர் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை மற்றும் மீட்பு நடவடிக்கைகளை தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர். டி.ஆர்.பி.ராஜா, மாவட்ட ஆட்சித்தலைவர் சாருஸ்ரீ ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர். கனமழை காரணமாக திருவாரூர் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை மற்றும் மீட்பு நடவடிக்கைகளை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.தி.சாருஸ்ரீ, எம்.எல்.ஏ.க்கள் பூண்டி. கே.கலைவாணன், க.மாரிமுத்து ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர். மாவட்ட ஊராட்சித்தலைவர் கோ. பாலசுப்ரமணியன் உடனிருந்தார்.

அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

இன்று திருவாரூர் மாவட்டத்தில் கனமழையினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை ஆய்வு செய்து வருகிறோம். முதலமைச்சர்; அவர்களின் நல்லாட்சியில் தமிழ்நாடெங்கும் மழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் கிராமப்புறங் களிலும், நகர்ப்புறங்களிலும் முறையாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. டெல்டா பகுதிக்கு பெங்கல் புயல் தாக்கக்கூடும் என்ற சூழலினை முன்னறிந்து சில வாரங்களுக்கு முன்பே முதலமைச்சர் அவர்களின் தலைமையில் சென்னையில் மழை முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. திருவாரூர் உள்ளிட்ட கடலோர பகுதிகளில் மழையின் பாதிப்பு அதிகமாக இருக்கக்கூடும் என்று இந்திய வானிலை ஆராய்ச்சி மையம் அளித்த தகவல் படி ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

**தடுப்பு நடவடிக்கைகள்!**

முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க திருவாரூர் மாவட்டத்தில் மழை முன்னெச்சரிக்கை தடுப்பு நடவடிக்கை குறித்த ஆய்வுக்கூட்டத்தினை கடந்த நவம்பர் 20ம்தேதி நடத்தினோம். அதனடிப்படையில், இம் மாவட்டத்தில் முன்னெச்சரிக்கை தடுப்பு நடவடிக்கை சிறப்பாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், இன்றைய தினம் அதிகம் பாதிக்ககூடிய பகுதிகளை கண்டறிந்து நேரடியாக கள ஆய்வு மேற்கொண்டோம். ஆய்வு மேற்கொண்டவரை தண்ணீர் முற்றிலும் முறையாக வடிந்துக்கொண்டு வருகிறது. திருவாரூர் மாவட்டத்தில் 176 தாழ்வான பகுதிகள் கண்டறியப்பட்டு அப்பகுதிகளுக்கு தனிகவனம் செலுத்தப்பட்டுவருகிறது. பொதுவாக இராமநாதபுரம் பகுதிதான் திருவாரூர் மாவட்டத்தில் அதிகம் பாதிக்ககூடிய பகுதிகளில் ஒன்றாகும். தற்பொழுது அப்பகுதி மக்கள் எவ்வித பாதிப்புமில்லாமல் இருக்கிறார்கள். அப்பகுதி மக்கள் மிகுந்த மகிழ்ச்சியுடன் உள்ளார்கள். அப்பகுதி மக்கள் இதற்கு காரணமான முதலமைச்சர் அவர்களுக்கு தனது நன்றியினை தெரிவித்தனர். மேலும், சிலபகுதிகளில் மக்கள் அளித்த கோரிக்கைகளையும் உடனுக்குடன் சரிசெய்ய நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுவருகிறது.

தொடர்ந்து, மக்களிடமிருந்து வரும் கோரிக்கைகளையேற்று நிறைவேற்றி தரும் மகத்தான அரசாக செயல்பட்டு வருகிறது திராவிட மாடல் அரசு.

**முதலமைச்சரிடம் ஆய்வு அறிக்கை!**

இதுவரை நாங்கள் ஆய்வு மேற்கொண்டதில் ஏறத்தாழ 200 முதல் 300 ஹெக்டேர் விவசாய பரப்பு பாதிப்படைந்துள்ளது என எதிர்பார்க்கப்படுகிறது. இம்மழை நாளை நீடிக்காவிட்டால் பெரும் பாதிப்பு இருக்காது என நம்புகிறோம். நாளை அல்லது நாளை மறுநாள் நீடித்தால் பாதிப்பு இருக்கும். இன்றைய தினம் நாங்கள் ஆய்வு மேற்கொண்ட அறிக்கையினை இன்று மாலையே தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு வழங்கவுள்ளேன். அதேபோல் திருவாரூர் மாவட்டத்திற்கு நியமிக்கப்பட்ட மாவட்ட கணிப்பாய்வு அலுவலர் தனியாக ஆய்வு மேற்கொண்டு வருகிறார்கள். எனவே அனைத்து தரப்பினரும் இந்த ஆட்சியில் மிகச்சிறப்பான முறையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம். விவசாய மக்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் இந்த அரசாங்கம் செய்து கொடுக்கும். ஆகாயத்தாமரை அடைப்பும் ஜேசிபி கொண்டு தொடர்ந்து எடுத்துவருகிறோம். பொதுவாக தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்களை நிவாரண முகாம் களில் தங்கவைக்கப்பட்டுள்ளார்கள். மேலும் நீர்நிலை களுக்கு அருகில் வசிக்கும் மக்களுக்கு மாற்று பட்டா வழங்கி, நீர்நிலை களுக்கு அருகில் மக்கள் குடியேறி இருப்பதனை குறைந்து வருகிறோம் என தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற் றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர்.டி. ஆர்.பி.ராஜா தெரிவித்தார்.

முன்னதாக, திருத்துறைப்பூ ண்டி நகராட்சி, அபிஷேக கட்டளை ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் அரசு மேல்நிலைப்பள்ளி முகாமில் தங்கி யுள்ள பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டுவருவதையும், அரியலூர் பகுதியில் விவசாய நிலங்களில் நீர் தேங்கி நிற்பதை பார்வையிட்டு விவசாயிகளு டன் அமைச்சர் கலந்துரையாடினார்.

தொடர்ந்து, திருத்துறைப்பூண்டி ஒன்றியத்திற்குட்பட்ட கீழப்பெருமழை ஊராட்சியில் வாய்க்கால் நீரில் தேங்கிநிற்கும் ஆகாயத் தாமரைகளை ஜேசிபி மூலம் அகற்றும் பணிகளையும், விளாங்காடு பகுதிகளில் மழைநீர் சூழ்ந்துள்ளதனை அகற்றப்பட்டுவருவதனையும், இராமநாதபுரம் பகுதியினையும் தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர்.டி. ஆர்.பி.ராஜா பார்வையிட்டார்.

இந்நிகழ்வுகளில், திருத்துறைப்பூண்டி நகர்மன்றத் தலைவர் திருமதி.கவிதா பாண்டியன், வட்டாட்சியர் குரு மூர்த்தி உள்ளிட்ட அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

## அரியலூர் போக்குவரத்துக் கழகத்தில் - பணிக்காலத்தில் மறைந்த

# பணியாளர்களின் 28 வாரிசுதாரர்களுக்கு பணிநியமன ஆணைகள்!

### அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார்!

அரியலூர், நவ, 29 -

அரியலூர் மாவட்டம், அரியலூர் போக்குவரத்து கழக பணிமனையில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்ப)லிட், கும்பகோணம் கோட்டத்தில் பணிபுரிந்த காலத்தில் மறைந்த பணியாளர்களின் 28 வாரிசுதாரர்களுக்கு (4 மகளிர் உட்பட) பணி நியமன ஆணைகளை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின் படி தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் (கும்ப)லிட்,கும்பகோணம் கோட்டத்தைச் சேர்ந்த திருச்சி, கும்பகோணம், நாகப்பட்டினம், கரூர், புதுக்கோட்டை மற்றும் காரைக்குடி ஆகிய 6 மண்டலங்களில் பணிபுரிந்த காலத்தில் மறைந்த பணியாளர்களின் 28 வாரிசுதாரர்களுக்கு பணி நியமன ஆணைகளை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார். அதன்படி 4 மகளிர் நடத்துநர் உட்பட 25 நபர்களுக்கு நடத்துநர் பணிக்கான ஆணைகளையும், 2 ஓட்டுநர் பணிக்கான ஆணைகளையும் மற்றும் 1 தொழில்நுட்ப பணியாளர் பணிக்கான ஆணையினையும் வழங்கினார்.

அந்த வகையில் கும்பகோணம் மண்டலத்தில் 5 நடத்துநர் பணியிடத்திற்கும், நாகப்பட்டினம் மண்டலத்தில் 3 நடத்துநர்களுக்கும், திருச்சி மண்டலத்தில் 2 மகளிர் உட்பட 6 நடத்துநர்களுக்கும், கரூர் மண்டலத்திற்கு 2 நடத்துநர்களுக்கும், காரைக்குடி மண்டலத்தில் 1 ஓட்டுநர் மற்றும் 1 மகளிர் உட்பட 6 நடத்துநர்களுக்கும், புதுக்கோட்டை மண்டலத்தில் 1 ஓட்டுநர் மற்றும் 1 மகளிர் உட்பட 3 நடத்துநர்களுக்கும், 1 தொழில்நுட்ப பணியாளருக்கும் இன்றைய தினம் பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து, இலகுரக வாகன பயிற்சி வாகனத்தினையும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடியசைத்து துவக்கி வைத்தார். இலகுரக வாகன பயிற்சிக்கு நபர் ஒருவருக்கு (ஜி.எஸ்.டி உட்பட) ரூ.7080 கட்டணமாக செலுத்த வேண்டும். பயிற்சிக் காலம் 22 நாட்களாகும். (செயல்முறை பயிற்சி காலம் 25 மணி நேரம் மற்றும் நேர்முக வகுப்பு 5 மணி நேரம்). முகவரி மாற்றத்திற்கான கட்டணம் தனியாக பயிற்சி பெறுபவர் செலுத்திக்கொள்ள வேண்டும் (தோராயமாக) ரூ.600 ஆகும்.

இந்நிகழ்ச்சியில் அரியலூர் நகர்மன்றத் தலைவர் சாந்தி கலைவாணன், நிர்வாக இயக்குநர் (கும்பகோணம்) இரா.பொன்முடி திருச்சி மண்டல பொது மேலாளர் முத்துகிரு ஷ்ணன், பொதுமேலாளர் (கூட்டாண்மை தொழில் நுட்பம்) சிங்காரவேலன், துணை மேலாளர் (மனித வள மேம்பாடு) ரெங்கராஜன், துணை மேலாளர் (வணிகம்கூட்டாண்மை) இராமநாதன், துணை மேலாளர்கள் சுரேஷ் (வணிகம் திருச்சி மண்டலம்), சுவாமிநாதன் (தொழில்நுட்பம் திருச்சி மண்டலம்), ரவி (பணியாளர் & சட்டம் திருச்சி மண்டலம்) பத்மகுமார் (பணியாளர் & சட்டம் காரைக்குடி மண்டலம்), மற்றும் மாவட்ட துணை செயலாளர் சி.சந்திரசேகரன், நகர செயலாளர் இரா.முருகேசன், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன் மற்றும் அனைத்து மண்டல உதவி மேலாளர்கள், அனைத்து தொழிற்சங்க பிரதிநிதிகள், ஓட்டுநர்கள், நடத்துநர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், அரியலூர், செயங்கொண்டம் தொமுச செயலாளர்கள் சேகர், பி.வி.அன்கழகன், தொமுச செல்வம் மற்றும் இதர அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட அவசர செயற்குழுக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ. அறிவிப்பு



கிருஷ்ணகிரி, நவ. 29 -

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டச் செயலாளர் ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ. விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட அவசர செயற்குழு கூட்டம் மாவட்ட அவைத்தலைவர் அ.யுவராஜ் தலைமையில் இன்று (29.11.2024 - வெள்ளிக்கிழமை) காலை 10.00 மணியளவில் ஒசூர் கிருஷ்ணகிரி தேசிய நெடுஞ்சாலை குமரன் மஹாலில் நடைபெற உள்ளது.

இக்கூட்டம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட நிர்வாகிகள் முன்னிலையில் நடைபெற உள்ளது.

இதில் மாநகர, ஒன்றிய, பேரூர், பகுதி செயலாளர்கள், நிர்வாகிகள், மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய பேரூர், பகுதி அணிகளின் தலைவர்கள், அமைப்பாளர்கள்,

துணை தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், இந்நாள், முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், வார்டு செயலாளர்கள், கிளை செயலாளர்கள், BLA2, கழகத் தோழர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: 1. டிசம்பர் 5 கழக இளைஞர் அணி செயலாளர் , தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் வருகை குறித்து,

2.கழக ஆக்கப்பணிகள் குறித்துவிவாதிக்கப்பட்ட உள்ளது.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## கோவை மாநகராட்சி

# மாமன்ற உறுப்பினர் விபத்தில் உயிரிழப்பு!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, நவ. 29 -

**கோவை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி விபத்தில் உயிரிழந்தார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். இச்செய்தியறிந்ததும், முதல்வர் அவர்கள் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார்.**

இது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு :-

இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த கோவை மாநகராட்சி 56ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் விபத்தில் உயிரிழந்த செய்தியறிந்து மிகவும் வருந்துகிறேன்.

அவரை இழந்து வாடும் குடும்பத்தினர்க்கும் காங்கிரஸ் பேரியக்கத்தின் தொண்டர்களுக்கும் பொதுமக்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.



மாநில இளைஞரணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு மாவட்டக் கழக செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. வழிகாட்டுதலின்படி பரமக்குடியில் ஆஞ்சநேயர் ஆலயத்தில் சிறப்பு அன்னதானம் வழங்கப்பட்டது. மேலும் ஆலயத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்கு புதிய ஆடைகள் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியை முன்னாள் அமைச்சர் டாக்டர் எஸ். சுந்தர்ராஜன், துவக்கி வைத்தார். உடன் நகர் மன்ற தலைவர் சேது கருணாநிதி, நகர் செயலாளர் ஜீவரத்தினம் மாவட்ட அறங்காவல் குழு தலைவர் சுப்புராயிலு, ஆஞ்சநேயர் கோவில் அறங்காவல் குழு தலைவர் இளையராஜா, அரங் காவல் குழு உறுப்பினர்கள் கார்த்தியை சாமி, ராமு, பாண்டியம்மாள், செல்ல பாண்டியன், சிவ வண்ணச் செல்வன், நகர் மன்ற உறுப்பினர்கள் மாலிக், பூசத்துறை ராதா, மற்றும் நகர் பொருளாளர் ஜானகிராமன் செந்தில், மோகன் மற்றும் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



விருதுநகரில் வடக்கு மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் அணி சார்பில் பேரோலி ரோடு விருச்சகம் காப்பகத்தில் குழந்தைகள் மற்றும் முதியோருக்கான உணவு மற்றும் புத்தாடைகளை சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன் வழங்கினார். உடன் அமைப்புசாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் சிவசுப்பிரமணியன், துணைத் தலைவர் எல்.திருமாறன், நகரச் செயலாளர் எஸ்.ஆர். எஸ்.தனபாலன், இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.கிருஷ்ணகுமார், நகர துணைச் செயலாளர் ஏ.எஸ்.கே.ரமேஷ் குமார், அவைத் தலைவர் காசிராஜன், விவசாய அணி நேஷனல் ராமர், அயலக அணி பாரத், ஆதி திராவிடர் நல அணி துணைச் செயலாளர் தவசேகர் மற்றும் கழக நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர்.



தேனி தெற்கு மாவட்டச் செயலாளர் கம்பம் ராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ., ஆலோசனைப்படி கம்பம் வடக்கு நகரச் செயலாளர் எம்.சி., வீரபாண்டியன் தெற்கு நகரப் பொறுப்பாளர் சி. பால்பாண்டி ராஜா ஆகியோர் ஏற்பாட்டில் கழக இளைஞரணி மாநில செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்த நாளை முன்னிட்டு மாற்றுத்திறனாளிகளுக்கு இனிப்புகள் வழங்கி நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. உடன் கொள்கைப் பரப்பு துணைச் செயலாளர் இரா. பாண்டியன், தெற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் வசந்தன், மாநில செயற்குழு உறுப்பினர் குருகுமரன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் கராத்தே ராமகிருஷ்ணன் மற்றும் நகரக் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.